1986 மே 13

குன்னூர் பைன் மரக்காடுகள்.

758—(வினா எண். 7456)—திரு. பரிதி இளம் வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்னூரில் உள்ள பைன் மரக்காடுகள் அழிந்து வருகின்றன என்பது உண்மையா?

(ஆ) இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) குன்னூரில் டெண்ட் ஹில் என்னும் பகுதியில் சாலையோரத்தில் 1.5 எக்டேர் பரப்பில் பைன் மரக் காடுகள் உள்ளன. அவை நல்ல நிலையில் உள்ளன. அவைகள் அழிந்து வருகின்றன என்பது உண்மை அல்ல.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

சீரணி அரங்கம்.

759—(வினா எண். 8917)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள சீரணி அரங்கத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—(அ) இல்லை.

(ஆ) அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை சீரணி அரங்கம் என்பது இன்றைக்கு எல்லாவிதமான அரசியல் கட்சிகளும், ஆன்மீக சிந்தனை உள்ளவர்களும் பயன்படுத்துகின்ற ஒரு சிறந்த இடம். ஆனால் அங்கே பயன்படுத்துவதற்குரிய தகுதியில்லாதிருப்பதால் அதைப் புதுப்பித்து சரி செய்ய வேண்டும். அங்கே மேடையிலே பேசும்பொழுது அந்த ஒலி சரியாகக் கேட்காத

நிலையில், இன்று கூடபார்த்தால் தெரியும், அருகிலே தட்டி வைத்துக் கட்டி அதைப் பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, இதை முக்கியமான பணியாகக் கருதி எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சியை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே அவர்கள் தொடங்கிய அந்தச் சீரணி என்கின்ற திட்டத்தின் அடிப்படையில் அந்தச் சீரணி படையினரை வைத்து, பொதுமக்களினுடைய நன்கொடையால் அந்தச் சீரணி அரங்கம் அங்கே உருவாக்கப்பட்டது. அது நீண்ட காலமாக இருந்து கொண்டு வருகின்ற காரணத்தினாலும், கடற்காற்றினாலே அரிப்பு ஏற்படுகின்ற காரணத்தினாலும் கொஞ்சம் பழுதுபட்டிருக்கிறது. அதை இன்னும் பெரிதாகவும், நல்ல உறுதியுள்ளதாகவும் மாற்ற வேண்டுமானால் அதற்கு நிறைய செலவிட வேண்டியிருக்கிறது. இப்பொழுதுகூட சிறிய பழுதுகளைப் பார்ப்பதற்காக சுமார் 7,500 ரூபாய்க்கு ஒரு ஆணை வேண்டி—அனுமதி வேண்டி அந்தப் பொதுப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர் அனுப்பி வைத்திருக்கிறார். அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அதிலே அரசு முதலீட்டிலே அந்தச் சீரணி அரங்கம் என்ற பெயருக்கு அடிப்படையாக அமைந்திருக்கிற கொள்கைக்கு மாறாக, அரசு முதலீடு செய்து, அதைப் பெரிதாக, அல்லது வசதி உள்ளதாக மாற்றினால், அதற்கு அந்தப் பொதுக் கூட்டங்களை நடத்துகிறவர்கள் அல்லது அந்த அரங்கத்தைப் பயன்படுத்துகிறவர்களிடத்திலேயிருந்து அதிகமான வாடகையைப் பெற வேண்டிய அவசியமும் ஏற்படும். அதைப் பற்றியெல்லாம் பரிசீலித்துதான் அரசு ஒரு இறுதியான முடிவு எடுக்க இயலும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா சீரணி அரங்கத்தில் வாரந்தோறும் சனி, ஞாயிறு நாட்களில் மக்களுக்கு நல்ல சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறும் திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் காட்ட அரசு ஏற்பாடு செய்யுமா? எனது தொகுதியிலுள்ள எலியட்ஸ் பீச்சில், மக்கள் பொழுது போக்குக்கு வசதியாக, அங்கேயும் சீரணி அரங்கம் போன்ற ஒரு அரங்கம் நிர்மாணிக்க அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சீரணி அரங்கில் அரசினுடைய துறைகளான குடும்ப நலத்துறை மற்றும் நம்முடைய சமுதாய நலத்

துறையின் சார்பில் மதுவிலக்குத் திட்டங்கள், குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டங்களை விளக்குகின்ற வகையில் நாடகங்களை கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அனுமதி வழங்கியிருக் கிறோம், மாதத்திற்கு ஒரு முறை இரண்டுமுறை நடத்தலாம் என்று, அதற்காக நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கின் றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், வாரத்திற்கு இரண்டு என்று நடத்துவது பயனுள்ள வகையில் அமையுமா என்பது ஒரு பிரச்னை. அப்படி வாரத்திற்கு இரண்டு நாளை நாமே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டால், பொதுமக்களுடைய பிரதிநிதிகள் அல்லது, கட்சிகள் அல்லது நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் அந்த அரங்கத்தைப் பயன் படுத்த முடியாமலும் போய்விடக்கூடும். ஆகவே அது அவ் வளவு உகந்த யோசனையாகத் தெரியவில்லை. எலியட்ஸ் பீச்சிலே அப்படி ஒரு அரங்கம் ஏற்படுத்துவது என்பது அந்த பீச்சினுடைய அமைப்பை, அழகை மக்களுக்கு இப்பொழுது இருக்கிற வசதியைக் குலைப்பதாகவோ அல்லது குறைப்பதா கவோ இருக்கும். அதை நல்ல யோசனையாக அரசு கருத வில்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்களால் கொடுக்கப்பட்ட நிதி யிலிருந்து சீரணி அரங்கத்தை விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு இல்லையென்றாலும் பழுதுபார்க்கின்ற பணி மேற்கொள்ளப் படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். சென்னை மாநகரத் தில் அரசு நிகழ்ச்சிகளும் மற்ற நிகழ்ச்சிகளும் நடக்கும்போது கலைவாணர் அரங்கம், இராஜாஜி மண்டபம், வள்ளுவர் கோட் டம் போன்ற இடங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, இயற்கையாகக் காற்றோட்ட வசதியுள்ள கடற்கரை சாலையில் இது போன்ற ஒரு மண்டபத்தைக் கட்டுகின்ற செயற் குறிப்பு உள்ளதா? இல்லையென்றால், அதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா? அரசு நிகழ்ச்சிகள் பகலிலே நடைபெற வசதியாக அப்படிப்பட்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலை வர் அவர்களே, கடற்கரையில் கடல் காற்றோடு நிகழ்ச்சிகளை நடத்த முடியும். கடற்கரை சாலை என்றாலோ, அல்லது வேறு எங்கேயாவது இருக்கிற சாலை என்றாலோ, மண்டபம் என்று வந்துவிட்டாலே மண்டபத்திற்குள்ளேதான் இருக்க முடியும். ஆகவே, மண்டபத்தை அமைப்பது என்பது எந்த இடத்திலே தேவைப்படுகிறது, எந்தப்பகுதி மக்களுக்குத்தேவைப் படுகிறது என்பதுதான் பிரச்சினையே தவிர, கடற்கரை சாலை யில் மண்டபம் அமைத்துவிட்டால் மாத்திரம் கடல்காற்று உள்ளே வராது. மண்டபம் என்றாலே மூடித்தான் இருக்கும்

ஆகவே, அதற்குள்ளே குளிர் சாதன வசதி பொருந்த வேண்டு மென்ற பிரச்சனை அடுத்தாற்போல் வரக்கூடும். மண்டபம் என்று கட்டினால், குளிர்சாதனம் பொருத்தப்பட்ட மண்டபம் என்றால் கடற்கரையில் இருந்தாலும் வேறு எங்காவது கானகத்திற்குள்ளே இருந்தாலும் ஒன்றுதான். ஆகவே எந்தப் பகுதிக்குத் தேவைப்படும் என்பதை ஒட்டித்தான் பிரச்சனைகள் கவனிக்கப்படுகின்றன. அந்த வகையில் கலைவாணர் அரங்கம் என்பதும் ஏறத்தாழ கடற்கரையை ஒட்டித்தான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தப் பிரச்சனை இப்பொழுது எழவில்லை.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதிலும் சீரணி அரங்கங்கள் இல்லாத ஒவ்வொரு ஒன்றியத்திலும் சீரணி அரங்குகள் அமைக்கின்ற திட்டம் உள்ளதா? அப்படி இல்லையென்றால் இனியாவது அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய அந்தச் சீரணி அரங்கம் அமைக்கின்ற திட்டம் என்பது முன்பே கைவிடப்பட்டு விட்டது. இப்பொழுது அது நடைமுறையிலே இருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் அங்கங்கே, பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான அத்தகைய அரங்குகளைக் கட்டுகின்ற முயற்சியை அந்த, அந்த ஒன்றியங்கள் அல்லது நகராட்சிகள் எடுத்தால், அதற்கு எந்த அளவிலே அரசு உதவி செய்வது என்பதைப் பற்றி பரிசீலிக்க இயலும்.

கடையநல்லூர் மருத்துவ மனை.

767. (*வினா எண். 5041): திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டி அதிக படுக்கைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹாண்டே : இல்லை.